நடப்பாண்டில், நீலகிரி மாவட்டத்தில் 80 ஏக்கர் பரப்பளவில் புதிதாக "இரு நூற்றாண்டு பசுமைப் புல்வெளி" என்னும் புதிய பூங்கா ஒன்று 10 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், வருடந்தோறும், சுமார் 10 இலட்சத்திற்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் அரசு ரோஜாப் பூங்காவிற்கு வருகை புரிவதால், போக்குவரத்து நெரிசல் அதிகமாகி, வாகனம் நிறுத்துவதற்கு மிகுந்த சிரமம் ஏற்படுவதைக் கருத்தில் கொண்டு, நீலகிரி நகரத்தில் 500 வாகனங்களை நிறுத்தும் வகையில் வாகன நிறுத்துமிடம் 3 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆக, மொத்தம் 127 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இன்று நான் அறிவித்துள்ள இத்திட்டங்கள்மூலம் தமிழ்நாடு வேளாண்மையும், விவசாயிகளின் வாழ்வாதாரமும் மேலும் செழிக்க வழிவகை ஏற்படும் என்பதை மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11–20

(ஆ) கைத்தறி மற்றும் பெடல் தறிகளுக்கான கூடுதல் உற்பத்தித் திட்டம், பன்னாட்டு ஜவுளிக் கண்காட்சி நடத்துதல், சாயமிடும் அலகுகள் அமைத்தல், பல்நிலை குளிர்பதன அலகு மற்றும் பட்டு நூற்பு அலகுகள் நிறுவுதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைக்கு அடுத்தபடியாக ஊரகப் பகுதி மக்களின் வாழ்வாதாரமாக விளங்குவதிலும், நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பை உருவாக்குவதிலும், நாட்டின் ஏற்றுமதி வருவாயைப் பெருக்குவதிலும் முக்கியப் பங்கு வகிப்பது நெசவுத் தொழில். இப்படிப்பட்ட இன்றியமையா தொழிலான நெசவுத் தொழிலின் வளர்ச்சிக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அம்மாவின் அரசு முன்னுரிமை அளித்து, பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. அதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டில் இத்துறை குறித்த பின்வரும் அறிவிப்புகளை இப்பேரவையில் அறிவிக்கின்றேன்:

1) விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம், கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்குவதை உறுதி செய்தல் மற்றும் கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் வசிக்கும் ஏழை, எளிய மக்களின் துணித் தேவையினைப் பூர்த்தி செய்தல் ஆகிய இரு நோக்கங்களை நிறைவேற்றும்பொருட்டு, ஒவ்வோர் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. அனைத்து கைத்தறிகள் மற்றும்

பெடல் தறிகளுக்கு ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பு வழங்கும்பொருட்டு கீழ்க்கண்டவாறு கூடுதலாக உற்பத்தித் திட்டம் வழங்கப்படும்:

i) கைத்தறி நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்கும் பொருட்டு, வரும் பொங்கல் 2019 முதல் ஜூன் மாதம் வரை கூடுதல் உற்பத்தித் திட்டம் வழங்கப்படும்.

ii) மொத்தமுள்ள பெடல் தறிகளில் விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின்கீழ் ஜூலை மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை 6 மாதங்களுக்கு ஏற்கெனவே உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டுவரும் 9,692 பெடல் தறிகள் போக எஞ்சிய 1,558 பெடல் தறிகளுக்கு மேற்படி 6 மாத காலம் கூடுதல் உற்பத்தித் திட்டம் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

iii) விலையில்லா சீருடை வழங்கும் திட்டத்தின்கீழ் உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டுவரும் 6,975 பெடல் தறிகள் போக எஞ்சிய 4,275 பெடல் தறிகளுக்கு பிப்ரவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரை 5 மாதங்களுக்கு விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின்கீழ் கூடுதல் உற்பத்தித் திட்டம் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

iv) ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி மாதத்தில் வேலைவாய்ப்பின்றி இருக்கும் மொத்தமுள்ள 11,250 பெடல் தறிகளுக்கும் விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின்கீழ் ஒரு மாதத்திற்கு கூடுதல் உற்பத்தித் திட்டம் வழங்கப்படும்.

இதற்காக ஆண்டொன்றுக்கு அரசுக்கு 15 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.

2) ஜவுளித் தொழிலின் வளர்ச்சியை தமிழ்நாட்டில் மேலும் ஊக்குவிக்கும்விதமாக, நடப்பாண்டில் தமிழ்நாடு அரசின் சார்பாக கோயம்புத்தூரிலுள்ள கொடிசியா அரங்கில் பன்னாட்டு ஜவுளிக் கண்காட்சி 2 கோடி ரூபாய் செலவில் நடத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3) தமிழ்நாடு அரசின் விலையில்லா சீருடைத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் சீருடைத் துணிகளைப் பதனீடு செய்வதை முக்கியப் பணியாகக் கொண்டு, தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் தொழிற்சாலை செயல்பட்டுவருகிறது. சீருடைத் துணிகளைப் பதனிடுவதன்மூலம் இவ்வாலை பிப்ரவரி முதல் ஆகஸ்டு முடிய 7 மாதங்கள் முழுமையாகச் செயல்படுகிறது. மீதமுள்ள

5 மாதங்கள் பதனிடுவதற்குப் போதுமான துணி இல்லாததால் குறைந்த திறனுடன் செயல்பட்டுவருகிறது. இந்நிலையைக் கருத்திற்கொண்டு, இங்கு பணிபுரியும் தொழிலாளர்களுக்கு சீருடைத் துணி பதனீட்டுப் பணி இல்லாத காலங்களில் தொடர் வேலைவாய்ப்பு வழங்கும் நோக்குடன், ஆலையைத் தொடர்ந்து இலாபத்தில் இயக்கச் செய்யவும், ஒரு தொகுதிக்கு (Unit) 2 டன் வீதம் 60 எஸ் கோம்டு நூல் சாயமிடும் திறன் கொண்ட சாயமிடும் அலகு 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4) தமிழ்நாடு தேசிய அளவில் வெண்பட்டு உற்பத்தியில் முதலிடம் வகிக்கிறது. தமிழ்நாட்டில் தலா 20 இலட்சம் பட்டு முட்டைகளைப் பதனம் செய்யும் திறன் கொண்ட இரண்டு பல்நிலை குளிர்பதன அலகுகள் கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரிலும், கிருஷ்ணகிரியிலும் செயல்பட்டுவருகின்றன. வெண்பட்டு முட்டை உற்பத்தியினை அதிகரித்து, அதனைப் பதனப்படுத்திட மேலும் 20 இலட்சம் பட்டு முட்டைகளைப் பதனம் செய்யும் திறன் கொண்ட ஒரு பல்நிலை குளிர்பதன அலகு ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும்.

5) தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பட்டுக்கூடுகளை முழுவதுமாகப் பயன்படுத்தி, பட்டு நூல் உற்பத்தி செய்யப் போதுமான பட்டு நூற்பு அலகுகள் இல்லை என்பதால், பட்டுக் கூடுகளுக்கு பிந்தைய பட்டு நூற்புப் பிரிவினை வலுப்படுத்தும் நோக்கில் நடப்பாண்டில் பட்டு நூற்பு அலகுகளை நிறுவிட மாநில அரசின் பங்காக நிதியுதவி பின்வருமாறு வழங்கப்படும்:

அ) 400 முனைகள் கொண்ட மூன்று தானியங்கி பட்டு நூற்பு அலகுகள் நிறுவிட ஒரு கோடியே 5 இலட்சத்து 77 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆ) 200 முனைகள் கொண்ட ஒரு தானியங்கி பட்டு நூற்பு அலகினை நிறுவிட 19 இலட்சத்து 96 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இ) ஒரு தானியங்கி டூபியான் பட்டு நூற்பு அலகினை நிறுவிட 11 இலட்சத்து 44 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.

ஈ) 100 முனைகள் கொண்ட பல்முனை பட்டு நூற்பு அலகுகள் 25 நிறுவிட, மாநில அரசின் பங்காக ஒரு கோடியே 6 இலட்சத்து 81 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2018 ஜூன் 14

உ) இரண்டு தனியார் பட்டு முறுக்கேற்றும் அலகுகளும், ஒரு அரசு பட்டு முறுக்கேற்றும் அலகும் நிறுவிட 10 இலட்சத்து 4 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொண்டு, அமர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. வேளாண்மைத் துறை மற்றும் கைத்தறி, கைத்திறன், துணிநூல் துறை குறித்த முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–25

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் மானம் காக்கும் மகத்தான துறை, கைத்தறி மற்றும் துணிநூல் துறை. கைத்தறி நெசவாளர்களின் துயர் துடைக்க பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் கைத்தறி துணிகளை தன் தோளில் சுமந்து கூவிக் கூவி விற்றார்கள் என்பது கைத்தறித் துறைக்கு கிடைத்திருக்கிற மகத்தான ஒரு வரலாறு. அதேவழியில் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும் தொடர்ந்து கைத்தறி நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்க வேண்டும் என்பதற்காக பல்வேறு மகத்தான திட்டங்களை வழங்கி, சிறப்புச் செய்திருக்கிறார்கள் என்பது வரலாறு. அதேவகையில் நெசவாளர் பெருமக்களுக்கு ஆண்டு முழுவதும் வேலை கிடைக்கவேண்டும் என்பதற்காக கைத்தறி, பெடல் தறி, விசைத் தறி என்று முக்கனியாக சிறப்பான அறிவிப்புகளைத் தந்திருக்கிற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு, பேரவை விதி 110—ன்மூலம் நெவாளர்கள் வாழ்க்கையில் ஒளியேற்றி வைத்திருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை மீண்டும் ஒருமுறை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*